பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
21 02 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு தனி மனிதனின் வளர்ச்சியும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. ஆயூஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டம் மக்களின் மருத்துவ செலவுகளை பெருமளவு குறைத்துள்ளதாக மத்திய சுகதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.
3. அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு புதிய கல்விக் கொள்கையை பின்பற்ற தமிழக அரசு முன்வர வேண்டுமென மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் கேட்டுக் கொண்டுள்ளார்.
4. உலக தாய்மொழி தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி தலைவர்கள் பலர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
5. மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் மும்பை – பெங்களுரு அணியை எதிர்கொள்கிறது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

**[]<<<>>>[]**

நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒவ்வொரு தனி மனிதனின் வளர்ச்சியும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் முதலாவது தலைமைத்துவ மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், இந்தியா உலகின் அதிகார மையமாக உருவெடுத்து வருகிறது என்றார்.

அனைத்து துறையிலும் ஆற்றல் வாய்ந்த தலைவர்கள் தேவை என்று குறிப்பிட்ட அவர், உலக அளவில் போட்டியிட உலகத்தரம் வாய்ந்த தலைவர்களும், சர்வதேச தலைமைப் பண்பும் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பூட்டான் பிரதமர் திரு ஷெரிங் தோப்கே சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

**[]<<<>>>[]**

மனநல ஆரோக்கியத்துக்கு தியானம் பேருதவியாக உள்ளது என்று குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தியானம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் பேசிய அவர், மன அழுத்தம் தற்போது மருத்துவத் துறைக்கு பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது என்றார்.

தியானம் தேசிய கலாச்சாரமாக உருவெடுக்கும்போது நாடு வளம் பெற்று அமைதியுடன் திகழும் என்று அவர். குறிப்பிட்டார்.

ஐயாயிரம் ஆண்டுகள் பாரம்பரிமிக்க நாகரீகத்தை கொண்ட நாடான இந்தியா உலகின் கலாச்சார மையமாக திகழ்கிறது என்றும் திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஆயூஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டம் மக்களின் மருத்துவ செலவுகளை பெருமளவு குறைத்துள்ளதாக மத்திய சுகதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில் 12-வது சர்வதேச சுகாதார மாநாட்டில் பேசிய அவர், மத்திய அரசு கடந்த பத்து ஆண்டுகளாக செயல்படுத்தி வரும் பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டம், தேசிய சுகாதார இயக்கம் போன்றவற்றால் மருத்துவ சிகிச்சைக்காக மக்கள் செலவு செய்யும் தொகை 64 சதவீதத்திலிருந்து 39 சதவீதமாக குறைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

மக்களுக்கு உலக தரத்திலான மருத்துவ வசதிகளை வழங்கும் நோக்கிலேயே பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள சுமார் 40 சதவீத மக்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைவதாகவும், 70 வயதுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் அனைவருக்கும் சிகிச்சை வழங்கப்படுவதையும் திரு ஜெ பி நட்டா சுட்டிக்காட்டினார்.

[]<<<>>>[]

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு புதிய கல்விக் கொள்கையை பின்பற்ற தமிழக அரசு முன்வர வேண்டுமென மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், பிரதமருக்கு எழுதிய கடிதத்திற்கு பதில் கடிதம் எழுதியுள்ள திரு தர்மேந்திரபிரதான், எந்த மாநிலத்திலும், எந்த மொழியையும் திணிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என குறிப்பிட்டுள்ளார்.

புதிய கல்விக் கொள்கை மொழி சுதந்திரத்தை நிலை நாட்டுவதோடு, மாணவர்கள் அவர்கள் விரும்பும் மொழியில் கல்வி பயில்வதை உறுதி செய்வதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளில் பயிற்றுவிப்பதை வலுப்படுத்துவதே புதிய கல்விக் கொள்கையின் முக்கிய நோக்கம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மாணவர்களுக்கு தங்களது தாய் மொழியில் கல்வி பயிலும் வாய்ப்பை உறுதி செய்வதாக இந்த கல்விக் கொள்கை அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழியை ஒரு மாநில மொழியாக மட்டுமன்றி அதை தேசிய பொக்கிஷமாக மத்திய அரசு கருதுவதாகவும் மத்திய அமைச்சர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் புதிய கல்விக் கொள்கை அமல்படுத்தப்படாததால், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழகத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள் வாய்ப்புகளை இழந்து வருவதையும் அவர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூக அடிப்படையிலும், கல்வி வளர்ச்சியிலும் முன்னோடியாக திகழும் தமிழகம், இந்தியாவில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டியாகவும் உள்ள நிலையில், இந்தியாவின் கல்வி முறையை உலக தரத்திற்கு அழைத்துச் செல்லும் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் திரு தர்மேந்திரபிரதான் வலியுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

(சவுண்ட் பைட் - சாங் - 8 நொடிகள்)

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபற்று வரும் மகா கும்பமேளாவுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மகா கும்பமேளா உலகெங்கிலும் உள்ள மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

கும்பமேளாவில் சுமார் 60 கோடி மக்கள் புனித நீராடி இருப்பதாக கூறியுள்ள அவர், உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் குளிப்பதற்கான தண்ணீர், குடிப்பதற்கான தண்ணீர் மற்றும் ஆற்று நீர் என ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு தர நிலைகளை பின்பற்றி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே, கும்பமேளா தண்ணீரின் தரம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் தேவையற்ற கருத்துக்களைக் கூற வேண்டாம் எனவும் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் கேட்டுக் கொண்டுள்ளார்.

கும்பமேளா அடுத்த வாரம் நிறைவடைய உள்ள நிலையில் கூட்ட நெரிசலை சமாளிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - சாங் - 8 நொடிகள்)

**[]<<<>>>[]**

உலக தாய்மொழி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நாளையொட்டி தலைவர்கள் பலரும் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், எண்ணற்ற மொழிகளுக்கு ஆதி மொழியாய் நின்று பல்லாயிரம் ஆண்டுகளாக செழித்து, தமிழர்களின் மனதில் ஆழ வேரூன்றி நிற்கும் தமிழ் மொழியை தமிழர்களாகிய நாம் அனைவரும் பெருமையுடன் போற்றுவோம் என்று கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அகத்திலும், புறத்திலும் அன்பும் வீரமும் கொண்டு வாழும் தமிழர்களின் தாய்மொழி போற்றுதலுக்குரிய பழமை சிறப்பு வாய்ந்த செம்மொழி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, தாய்க்கு நிகரான தமிழ் மொழியை போற்றி வணங்குவதுடன், எல்லா மொழிகளுக்கும், மக்களின் உணர்வுகளுக்கும் சமத்துவப் போக்குடன் மதிப்பளிப்போம் என்று கூறியுள்ளார்.

பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை வெளியிட்டுள்ள செய்தியில், தாய்மொழியாம் தமிழை அடிப்படையாகக் கொண்டு, பல மொழிகளைக் கற்பதன் மூலம் தமிழ் மொழியின் பெருமையை உலகறியச் செய்வோம் என்று தெரிவித்துள்ளார்.

தொன்மை சிறப்பு வாய்ந்த தாய் மொழியான தமிழ் மொழியை பயின்றது பெருமிதம் அளிப்பதாக கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலைச் சேர்ந்த தமிழ் ஆராய்ச்சி மாணவர் திரு ராபின் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - ராபின் ) --- 20 செகண்ட்*

**[]<<<>>>[]**

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதி இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண்துறை தெரிவித்துள்ளது.

விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்து கிராமப்புறங்களில் வருமானத்தை மேம்படுத்தும் நோக்கில் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களின் விளைவாக இந்தியாவில் சாகுபடி செய்யப்பட்ட சங்கோலா மற்றும் பஹூவா ரக மாதுளம் பழங்கள் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று தாதுச் சத்து மிகுந்த ட்டிராகன் பழங்கள் லண்டன் மற்றும் பஹ்ரைனுக்கும், அமெரிக்காவுக்கு சிவப்பு அரிசியும் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் கடும் பனிப்பொழிவு காரணமாக மூடப்பட்டிருந்த ஜம்மு - ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் மீண்டும் இரு வழிப் போக்குவரத்து தொடங்கியுள்ளது.

இந்த நெடுஞ்சாலையில் உள்ள பனிஹால் - ராம்சூ வழித்தடத்தில் இருந்த பனிக் கட்டிகள் போர்க்கால அடிப்படையில் அகற்றப்பட்டதை அடுத்து அந்த சாலையில் முதல்கட்டமாக இலகுரக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

விரைவில் கனரக வாகனங்களுக்கும் அனுமதி அளிக்கப்படும் என தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை — பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

புரோ லீக் ஹாக்கி போட்டியில் இன்று நடைபெறும் மகளிர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா — ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் இப்போட்டி மாலை மணி 5-15-க்கு தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில் இந்தியா - அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

குவாஹாத்தியில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

கத்தார் ஓபன் டென்னிஸ் போட்டியில் இன்று நடைபெறும் ஆடவர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி — குரேஷியாவின் யுவான் டோடிக் இணை - இங்கிலாந்தின் ஜூலியன் கேஷ் - லாயிட் கிளாஸ்பூல் இணையை எதிர்கொள்கிறது.